**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 214 of 2024

DATE : 04.11.2025

Depositions of witness for Prosecution

PW : 1

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜாராம் | Caste | |
| Father/Husband's Name | சுப்பையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of November 2025

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது. )**

**முதல் விசாரணை –**

நான் தற்போது வ. புதுப்பட்டியில் வசித்து வருகிறேன். ஆசிரியராக பணி செய்து ஓய்வு பெற்று தற்பொழுது விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்குத் தெரியும். கடந்த 27.11.2017 அன்று காலை சுமார் 08.30 மணிக்கு நானும், எனது தோட்டத்தில் வேலை பார்த்தேன் தொழிலாளர்களும் தோட்டத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தோம். அப்பொழுது இந்த வழக்கின் எதிரிகள் கையில் ஆயுதங்களுடன் மாடுகளை பிடித்துக் கொண்டு என்னுடைய தோட்டத்திற்குள் நுழைந்தார்கள். எதற்காக மாடுகளை தோட்டத்திற்குள் அழைத்து வருகிறீர்கள் என்று கேட்டதற்கு 2வது எதிரி கூதிமகனே என்று பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார்கள். எதற்காக அசிங்கமாக பேசினீர்கள் என்று கேட்டதற்கு 2வது எதிரி முத்துக்குமார் அருவாளை காட்டி என்னை கொலை செய்து விடுவதாக கொலை மிரட்டல் செய்தார். ஓத்த கூதி

என்று கூறிக்கொண்டு என்னையும் தோட்டத்தில் வேலை பார்ப்பவர்களையும் உடனடியாக தோட்டத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும் இல்லையென்றால் அருவாளை வைத்து வெட்டி கொலை செய்து விடுவதாக கொலை மிரட்டல் செய்தார்.

உயிருக்கு பயந்து போய் நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றேன். செல்லும் வழியில் எனது தோட்டத்தில் வேலை பார்க்கும் பெண் எனக்கு கைபேசியில் தொடர்பு கொண்டு, வழக்கின் எதிரிகள் எனது தோட்டத்தில் உள்ள கிணற்றின் அருகே உள்ள குடிசையை சேதப்படுத்துவதாக கூறினார். அதை கேட்டு நான் காவல் நிலையம் செல்லாமல் மீண்டும் என்னுடைய ஊருக்கு சென்று நல்ல தம்பி மற்றும் முருகன் என்பவரை அழைத்துக் கொண்டு என்னுடைய தோட்டத்திற்கு வந்தேன். நான் தோட்டத்தை வந்து பார்க்கும் பொழுது சுமார் 400 வாழை மரங்கள் மாடுகளை வைத்து மேய்த்து சேதப்படுத்தியும், கூரையை சேதப்படுத்தியும் வைத்திருந்தார்கள். அதனுடைய மதிப்பு ரூபாய் 20,000/- வாழை மரங்களுக்கும், ரூபாய் 5,000/- குடிசைக்கும் என நான் சேத மதிப்பீடு செய்தேன். என்னுடன் வந்தவர்கள் எதிரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சி செய்தும் அவர்கள் முன் வராததால் இரண்டு நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –**

புகார் மனு என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனதில் என்னை தவிர வேறு யாரேனும் கையெழுத்து செய்தார்களா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. புகார் மனுவானது கடந்த 27.11.2017 அன்று எழுதப்பட்டது என்றால் சரிதான். ஆனால் புகார் மனுவானது இரண்டு நாட்கள் கழித்து 29.11.2017 அன்று காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது. தோட்டத்தில் வேலை பார்க்கும் ஜீவமணி என்பவர் எனக்கு கைபேசியில் தொடர்பு கொண்டு எதிரிகள் கூரையை சேதப்படுத்தியதாகவும், அதனைத் தொடர்ந்து நான் ஊருக்குச் சென்று நல்ல தம்பி மற்றும் முருகன் ஆகியவர்களை அழைத்துக் கொண்டு தோட்டத்திற்கு வந்த விபரத்தை புகார் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

புகார் மனுவில் வழக்கின் எதிரிகள் வாழை மரங்களை சேதப்படுத்தியதாக தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தோட்டத்தில் இருந்த வாழை மரங்களானது சுமார் 6 மாதம் வளர்ச்சி பெற்ற மரங்கள். எத்தனை மாதங்கள் வளர்ச்சி பெற்ற பிறகு வாழைமரம் குழை விடும் என்றால் 11 மாதங்கள் கழித்து. 6 மாதம் வளர்ச்சி பெற்ற மரமானது சுமார் 4 அடி உயரம் வளரும் என்றால் சரியல்ல. 3 முதல் 3 ½ அடி வளரும். அந்த சமயத்தில் வாழை மரத்தில் நிறைய இலைகள் இருக்கும் என்றால் சரிதான். நான் புகார் மனுவில் சொல்லியுள்ள 400 வாழை மரங்கள் என்று எவ்வாறு நான் சொல்லி உள்ளேன் என்றால். மரங்களை எண்ணி பார்த்து விட்டு தான் நான் சொல்லி உள்ளேன். வழக்கின் எதிரிகள் எனது தோட்டத்திற்கு வந்த பின்பு நான் எவ்வளவு நேரம் கழித்து அங்கிருந்து சென்றேன் என்றால் சுமார் 20 நிமிடத்தில் நான் தோட்டத்திலிருந்து வெளியேறி விட்டேன். நானும் எனது தோட்டத்தில் வேலை பார்த்த ஜீவமணி என்பவரும் தோட்டத்தில் இருந்து வெளியே சென்று விட்டோம் என்றால் சரிதான். அதன் பின்பு வழக்கின் எதிரிகள் என்னுடைய தோட்டத்தில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது தோட்டத்தில் வேலை பார்க்கும் ஜீவமணி என்பவர் சற்று தொலைவில் தான் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் சொல்லி எனக்கு தெரியும்.

ஜீவமணி என்னை தொடர்பு கொண்டு பேசும்பொழுது எவ்வளவு மணி இருக்கும் என்றால் சுமார் 9:30 மணி இருக்கும். தகவல் கிடைத்த பின்பு நான் எப்பொழுது என்னுடைய ஊருக்கு சென்றேன் என்றால் உடனே ஆட்டோ பிடித்து ஊருக்கு சென்று விட்டேன். சாட்சிகள் நல்லதம்பி மற்றும் முருகனை ஒரு மணி நேரம் கழித்து நான் பார்த்தேன். 2 நாட்கள் சாட்சிகள் நல்லதம்பி மற்றும் முருகன் எதிரிகளை அழைத்து பேசுவதற்கு முயற்சி செய்ததாக சொல்லியுள்ள நிலையில் எங்கே வைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பேச்சுவார்த்தை சுமுகமாக முடியாத விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் இரண்டு நாட்கள் கழித்து எனக்கு நல்ல தம்பி தெரிவித்தார். சாட்சிகளை அழைத்து விசாரித்தால் எதிரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்திய விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல சாட்சிகள் எதிரிகளிடம் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்றும், புகார் மனுவானது காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளதால் அதனை ஈடு செய்ய பொய்யாக வழக்கிற்காக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டு மாடுகளை வைத்து 400 வாழை மரங்களை இந்த வழக்கில் எதிரிகள் சேதப்படுத்தியதாக சொல்லியுள்ள நிலையில்,

இரண்டு மாடுகளை வைத்து 400 வாழை மரங்களை சேதப்படுத்த முடியாது என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாடுகள் வாழை இலைகளை தான் சாப்பிடும் என்றும், வாழை மரங்களை சேதப்படுத்தாது என்றும், வழக்கிற்காக சேதப்படுத்தியதாக நான் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும் இடையே இருந்து வரும் சொத்து பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு முன் விரோதம் காரணமாக பொய்யாக இந்த புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

வழக்கின் எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் தான் இந்த புகார் மனு பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கில் எதிரிகள் எவ்வித வழக்கு சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும், பொய்யாக அறிக்கை உற்பத்தி செய்து இந்த வழக்கானது பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் எதிரிகள் என்னை தகாத வார்த்தையால் பேசி கொலை மிரட்டல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு